# பாட்டுப் பிறக்குமடா!

வாணிதாசன்

# பாட்டுப் பிறக்குமடா!

கவிஞர்
வாணிதாசன்

விற்பனை உரிமை :
மணிமணி புத்தக நிலையம்
138-A, பவழக்காரத் தெரு, சென்னை-1.

மஞ்ஞேன் மணி—38
முதற் பதிப்பு : டிசம்பர், 1963
உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ. 1-50

வெளியிட்டோர் :
**ஐயை பதிப்பகம்,**
புரட்சியகம்,
சேலியமேடு,
கடலூர், என். டி.

அச்சிட்டோர்:
மாருதி பிரஸ்,
சென்னை—14.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | என் உரை | ... v |
| | பதிப்புரை | ... vi |
| 1. | பாட்டுப் பிறக்குமடா! | ... 1 |
| 2. | எழில் தேக்கமே! | ... 2 |
| 3. | கண்டேன்! | ... 3 |
| 4. | பெண்ணோ? | ... 4 |
| 5. | பெண்ணிற் பெருந்தகை! | ... 5 |
| 6. | புரிந்து கொண்டேனே! | ... 6 |
| 7. | உன்னைத்தான் காண்கின்றேன்! | ... 7 |
| 8. | கருத்தை அழிக்குதே! | ... 8 |
| 9. | பெண் எனக்குத் தேவை! | ... 9 |
| 10. | அத்தை மகள்! | ... 10 |
| 11. | சலித்தன கண்கள்! | ... 11 |
| 12. | பொதுவாகச் சொல்லடி தோழி! | ... 12 |
| 13. | செய்ந்நன்றி இதுதானோ? | ... 13 |
| 14. | போதாதோ? | ... 14 |
| 15. | பேசாத ஓவியமோ? | ... 15 |
| 16. | கூறுயோ? | ... 16 |
| 17. | கேட்டாயா செய்தி? | ... 17 |
| 18. | உணர்ந்தான் இலையே! | ... 18 |
| 19. | ஆடக் கண்டேன்! | ... 19 |
| 20. | அதோ வந்தான்! | ... 20 |
| 21. | திரும்பச் சொல்வாயோ? | ... 21 |
| 22. | கொல்லாதே! | ... 22 |
| 23. | உன்னோடு ஒரு நாள்! | ... 23 |
| 24. | போதுமடா! | ... 24 |
| 25. | வார்த்தைகள் போதாவே! | ... 25 |
| 26. | எப்படி நான் மறப்பேன்? | ... 26 |
| 27. | காதல் | ... 27 |
| 28. | காண்போம் வா! | ... 29 |
| 29. | போகவில்லை! | ... 30 |
| 30. | நான் பிறந்த நாள் | ... 31 |
| 31. | அன்றொரு நாள் | ... 33 |
| 32. | தமிழ் வாழ்க! | ... 34 |
| 33. | தமிழ் வெல்க! | ... 35 |
| 34. | நீ வாழ்வாய்! | ... 36 |

| | | | |
|---|---|---|---|
| 35. | ஆளுகை உன்னதடா! | ... | 37 |
| 36. | பெற்றுவிட்டோம்! | ... | 38 |
| 37. | ஆடுங் கூத்து! | ... | 39 |
| 38. | இயன்றதைச் செய்க! | ... | 40 |
| 39. | பாரதி நாள் | ... | 41 |
| 40. | அதோ பாரடி! | ... | 42 |
| 41. | புதுப் பெண்ணே! | ... | 43 |
| 42. | அன்றும் இன்றும் | ... | 45 |
| 43. | ஓடைக் கரையினிலே! | ... | 46 |
| 44. | ஆடு குழந்தாய்! | ... | 47 |
| 45. | யாழ் எடுத்து மீட்டிப் பாடு! | ... | 48 |
| 46. | ஆடும் மயில் போல் ஆடு! | ... | 49 |
| 47. | எவர் தந்தார்? | ... | 50 |
| 48. | எப்படி? | ... | 51 |
| 49. | பறந்து செல்வாய் கிளியே! | ... | 52 |
| 50. | வாழைத் தோப்பு | ... | 54 |
| 51. | அகங்கைத் தேன் | ... | 55 |
| 52. | மாலையும் வந்தது! | ... | 56 |
| 53. | இன்பந் தந்தானே! | ... | 57 |
| 54. | மனமும் மாறுமோ? | ... | 58 |
| 55. | விடையனுப்பி வைத்தாள்! | ... | 59 |
| 56. | நடக்கிறதே அண்ணே! | ... | 60 |
| 57. | பார்த்தாயா மகனே? | ... | 61 |
| 58. | புலியே, எழு! | ... | 62 |
| 59. | அன்னையே, வணக்கம்! | ... | 63 |
| 60. | எங்கள் தமிழ்நாடு | ... | 64 |
| 61. | எழுந்திரு! | ... | 65 |
| 62. | நட! நட! | ... | 67 |
| 63. | வா! வா! வரிப்புலியே! | ... | 68 |
| 64. | பழக்கூடைக்காரி | ... | 70 |
| 65. | பாரடி! | ... | 72 |
| 66. | கலியாணமாகாத தம்பி! | ... | 73 |
| 67. | பாங்கைப் பாரடி! | ... | 74 |
| 68. | தடிப்புக் குறையவில்லை! | ... | 75 |
| 69. | என்று திரும்புவார்? | ... | 76 |
| 70. | இதுவே வேலை! | ... | 77 |
| 71. | அண்ணா வாழ்க! | ... | 78 |
| 72. | வாழ்க வாழ்கவே! | ... | 79 |
| 73. | பாடு பாப்பா! | ... | 80 |

# என் உரை

நான் கவிதை எழுதத் தொடங்கிய நாளி லிருந்து இற்றை நாள் வரை எழுதிய கவிதை களில் இதுவரை வெளிவந்துள்ள கவிதை நூல்கள் ஒன்பதிலும் சேர்க்கப்படாமல் எஞ்சி யிருந்தவைகளைத் தேடித் திரட்டித் தொகுத்தும் வகுத்தும் மூன்று நூலாக உருவாக்கித் தந்தனர் என் கெழுதகை நண்பர்கள். அவற்றுள் 'சிரித்த நுணா', 'இரவு வரவில்லை' என்னும் இரு நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. 'பாட்டுப் பிறக்குமடா!' என்னும் இந்த நூல் மூன்றாவதாகும். இதில் அடங்கியுள்ள பாடல் கள் அனைத்தும் இசைப் பாடல்களாகும். இசைப் பாட்டுக்கள் அடங்கிய நூல்களில் 'தொடு வானத்'திற்குப் பிறகு வெளிவரும் நூல் இதுவே ஆகும்.

இதிலுள்ள கவிதைகளில் பல அவ்வப் போது இதழ்களிலும், பிறரால் வெளியிடப் பட்ட நூல்கள் மலர்கள் ஆகியவற்றிலும் வெளியானவை. சில புதிதாக எழுதிச் சேர்க்கப் பெற்றவையாகும்.

இதனை வெளியிட்ட ஐயை பதிப்பகத் தார்க்கும், விற்பனை உரிமை ஏற்றுள்ள மனோன்மணி புத்தக நிலையத்தார்க்கும் என் நன்றி!

—**வாணிதாசன்.**

# பதிப்புரை

வித்துவான் கவிஞர் வாணிதாசன் அவர்கள் குழந்தை இலக்கியம் முதலாகப் புலமைப் பாடல்கள் ஈறாக இதுவரையில் பதின்மூன்று நூல்கள் எழுதியுள்ளார்கள். அவ்வரிசையில் இவர் எழுதிய இசைப்பாட்டு 'தொடுவானம்' என்னும் நூல் முதலாவதாகும். இசைப் பாடல்களின் வரிசையில் இந்நூல் இரண்டாவதாக வெளியிடப்படுகிறது. இந்நூலில் 'பாட்டுப் பிறக்குமடா!' முதலாக எழுபத்துமூன்று பாடல்கள் உள்ளன. அனைத்தும் தனித்தனி முக்கனி பிழிந்த சாறென இனிக்கும் தன்மையனவாகும்.

'பாரதிதாசனின் பெயரை உரைத்திடப் பாட்டுப் பிறக்குமடா!' என்ற எடுப்பில், ஆசிரியரிடம் தாம் கொண்டுள்ள அன்பின் பெருக்கை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐயம், துணிபு, குறிப்பறிதல், ஓதற்பிரிவு, பொருள் வயிற்பிரிவு முதலிய துறைப்பாட்டு வகையில் ஆசிரியர் பாடியுள்ளவை படித்து மகிழ்தற்குரிய வனப்புடையனவாகும்.

எளிய நிகழ்ச்சியையும் காட்சியையும் படம் பிடித்து உயிர் அளித்து மகிழ்விக்கும் அழகு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

**'கட்டைச் சிறுதிண்ணை மீதமர்ந்தே—என்**
**கருத்தெல்லாம் உன்பாற் செலுத்தி விட்டே**
**பட்டுடற் பூனையின் மெய்வருடிக்—கூரை**
**பாய்ந்து வரும் அணில் பார்த்திருப்பேன்.'**

இவ்வாறு இயற்கையை வருணித்துக் காட்டும் தன்மை நவிற்சிகள் பல காணலாம்.

தலைவனின் வரவு பார்த்திருக்கும் தலைவியின் நிலைமையைச் 'சலித்தன கண்கள்' என்னும் தலைப்பில்,

**'காவல்நாய் வீட்டோரம் காதுகள் உதறும்!**
**கதவைத் திறந்து பார்த்தே என்மனம் பதறும்!**
**ஆவலடங்கா உள்ளம் அடுக்களை செல்லும்!**
**அருந்த உணவெடுக்கும்! மருந்தென்று வெறுக்கும்!'**

என்று பாடியிருக்கிறார் கவிஞர். இது பழந்தமிழ் அகப்பொருள் நூல்களில் காணும் நயத்தினை மிகமிக எளிதாக்கி எல்லாரும் கற்றுணர அளித்துள்ள சிறப்பினை விளக்குவதாகும்.

பொருள்வயின் பிரிந்த தலைவனை எண்ணி இரங்கும் தலைவி,

**'வாழப் பொருள்தேவை அறிவிலார் நீதி!'**
**பொன்னல்ல வாழ்க்கைக்கு வேண்டிய துள்ளம்'**

என வரும் அடிகள், 'ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை. அரிதரோ சென்ற இளமை தரற்கு' என்னும் கலித்தொகைப் பாட்டை நினைவூட்டக் காணலாம்.

'பேசாத ஓவியமோ?', 'ஊமையோ? இல்லை! இல்லை!' என வரும் பாடலில் உவமையழகு மிளிருவதைக் கண்டு மகிழ்க!

'கேட்டாயோ செய்தி' என்னும் தலைப்பில் வரும் பாட்டு, கணவன் பழியைத் தூற்றாத குலமகளின் பெருங் குணத்தை எடுத்துக்காட்டும் பெற்றியையும், அவன் திருந்தி வாழவேண்டும் என்பதில் அவளுக்குள்ள பேரக்கறையையும் புலப்படுத்துகின்றது.

தலைவன் மணந்துகொண்டு இல்லறம் நடத்தாமல் களவு இன்பத்திலே காலங் கடத்துகின்றான். தலைவியின் நிலை யுணர்ந்த தாய் விழிப்புடைகிறாள்; அவளைக் கட்டுப்பாட் டிற்கு உள்ளாக்குகிறாள். அதனால் தலைவியின் உயிர் வேதனைப் படுகிறது. அவள் தோழியை அழைத்துத் தலைவனுக்குத் தன் நிலைமையை விளக்கிக் கூறி, 'விருந்திற்கு இங்கு ஏற்பாடு செய்' என்று கூறுகிறாள். இவ்வாறு அவள் கூறும் மொழியில் எவ்வளவு பொருள் பொதிந்துள்ளது என்பது எண்ணி மகிழ் தற்குரியதாகும்.

**'அண்டை அயலாரிடம் அவனுற் படுந்துயரை**
**அப்படியே சொல்ல எப்படிப் பெண்ணானாகும்?'**

எனத் 'திரும்பச் சொல்வாயோ?' என்னும் தலைப்பில் அமைந் துள்ள பாட்டு,

**'உடம்பும் உயிரும் வாடியக் காலும்**
**என்னுற் றனகொல் இவையெனின் அல்லது**
**கிழவோன் சேர்தல் கிழத்திக் கில்லை'**

என்னும் தொல்காப்பிய இலக்கண மரபையொட்டிப் பாடப்பெற்றுள்ளது என்பதைக் கற்றவர்கள் நன்கு உணர்வர்.

கவிஞர் இருபொருள் தோன்ற ஒரு சொல்லை அமைத்துப் பழந்தமிழ் இலக்கணத்திற் காணும் சிலேடை அணியை உணர வைக்கும் இடங்கள் நிறைய உண்டு ஆங்காங்கே.

நிலவின் சின்னத்தனத்தை வஞ்சகர் செயலுக்கு ஒப்பிட்டுள்ள புதுமையைப் 'போகவில்லை' என்னும் தலைப்பில் காணலாம்.

இயற்கை அன்னையின் படப்பிடிப்பு, கவிஞர்க்குத் தனிச் சொத்தென்றே கூறிவிடலாம்.

மணமான புதுப் பெண்ணைப் புரட்சியுள்ளம் கொள்ளச் செய்வதும், அன்றும் இன்றும் எனக் காலத்தைச் சுட்டிச் சிந்திக்க வைப்பதும் நனிசிறந்து மிளிர்கின்றன.

கிள்ளைவிடு தூது முறையில் 'பறந்து செல்வாய் கிளியே' என்ற பாட்டுச் சுவையூட்டுகின்றது.

குற்றியலுகரத்தின் ஒலியை உவமையாக எடுத்தாண்ட முதற் கவிஞர் வாணிதாசரே என்றால், அது மிகையாகாது.

கவிஞர் தாம் சொல்ல விரும்பியதை அப்படியே பச்சையாகச் சொல்லாமல் அழகு தோன்ற இடக்கரடக்கலாக ஞயம்பட உரைக்கும் தன்மை கற்பவர் உளத்தில் கழிபேருவகை ஊட்டுவதாகும்.

**'கொண்ட நோய்க்கு மருந்து அண்டையில் இருக்கக்**
**கொட்டிப் பொருளிழந் தெட்டித் திரிவதோ?'**

**'மூசாத இருமொக்கும் மூசிய ஒருமொக்கும்**
**மூடித்த குளத்தருகிற் களைத்து வந்தேன் நான்!'**

**'வேரிற் பழுத்தபலா வீணே அழியுமுன்பு**
**விருந்திற்கிங் கேற்பாடு செய்யென்று சொல்சென்று!'**

**'நொந்த இடையைச் சாய்ந்து தந்தங்கள் பார்க்க**
**நூறுமுறை பாயும் வேல்விழி உயிர்போக்க'**

**'காயும் முழுநிலவில் காற்றுடும் மாடியில்**
**வாயில்லை என்னிடை வம்புத்தனம் பட்டதை'**

என வரும் அடிகள் மேற்கூறியதற்குத் தகுந்த எடுத்துக் காட்டுகளாகும்.

அகமும் புறமும் இந்நூல் முழுவதும் வெற்றி நடை போட்டுச் செல்வதைக் காணலாம். படித்துப் பயனுறுக!

இதனை எங்கள் வழி வெளியிட உரிமையளித்த கவிஞர்க்கும், நன்முறையில் அச்சிட்டு விற்பனை உரிமை ஏற்றுள்ள மனோன்மணி புத்தக நிலையத்தார்க்கும் நன்றி!

—ஐயை பதிப்பகத்தார்.

# 1

## பாட்டுப் பிறக்குமடா!

பாரதி தாசனின் பெயரை உரைத்திடப்
பாட்டுப் பிறக்குமடா!—எங்கள்

வார்புனற் காவிரி ஆற்றினைப் போல
வளஞ் செய்தான்; தமிழகம்
உளம் வைத்தான் புரட்சித்தீ!

எளிய நடையில் தமிழ்ச்சுளையைப் பிழிந்தெடுத்தே
இடையிடையே நகைத்தேனைக் கூட்டிக் குழைத்தே
எளியவரும், அறிவில் முதியவரும் உண்ண
ஏடெழுதிக் கொடுத்தான் ஈடுமிணையு மற்றான்!

'தமிழைத் தடுப்பவள் தாயா னாலும்
தலையை நறுக்'கென்னும் மலைநிகர் தோளான்!
இமியும் கலங்காமல், எதிர்ப்புக்குச் சாயாமல்
எண்ணியதை உரைக்கும் அண்ணல் புரட்சிக்கவி!

வாழ்வே தமிழின் வளமெனக் கொண்டான்!
வணங்கிப் பிழைப்பதை நஞ்சென விண்டான்!
சூழுந் தமிழர் நலம்ஒன்றே வீசும்
சூறு வளியிலும் உயிரென்றே கொண்டான்!

வாழ்க தமிழர் வளமலி நாடு!
வாழ்க தமிழர் இனம்புக ழோடு!
வாழ்கபா ரதிதாசன் எங்கள் புரட்சிக்கவி
வளமிக்க தமிழ்போல நலமிக்கு நீடூழி!

# 2

## எழில் தேக்கமே!

எங்கெங்கும் எழில் தேக்கமே!—நல்
இன்பப் பெருக்காம் இயற்கையின் ஆக்கமே!

சங்காடு கடலோரம், சதிராடு மன்றோரம்,
தெங்காடு இளநீராம் தீந்தமிழ் ஊற்றோரம்

மானாடு குன்றோரம், மஞ்சாடு மலையோரம்,
தேனாடு காட்டோரம், செடியாடு மேட்டோரம்,
வானாடு விண்மீன்கள் இடையாடு மதியோரம்,
கானாடு குயிலொத்த கவிவாணர் நாவோரம்

தாராடு தமிழ்க்காளை மணிமார்பு தோள்மேலே,
வாராடு பெய்வளை மருங்காடு மயில்மேலே,
நீராடு பொய்கையில் நிமிர்ந்தாடு மலர்மேலே,
சீராடு சிறுபிள்ளைச் சிரிப்பாடும் இதழ்மேலே

கரும்பாடு வயலோரம், கனியாடு தோப்போரம்,
அரும்பாடு நறுமுல்லை அழகாடு காட்டோரம்,
சுரும்பாடு நீர்நிலை தோய்ந்தாடு கரையோரம்,
இரும்பாடு கொடும்பாலை இடையோரம்
படையோரம்

# 3

## கண்டேன்!

கண்டேன்! கண்டேன்! கண்டேன்!—என்
கண்கள் இதற்குமுன் காணு எழிலை

வண்டு பொருந்தாத் தாமரை முகமும்,
வண்டு பொருந்திய தாமரை விழியும்

வானப் பிறையோ? கொடுவாட் கத்தியோ?
மங்கையின் நுதலுக் கெதுதான் சரியோ?
தேனும் கார்குழல் கார்மணம் காட்டா!
செழுங்கடல் அலையோ கருமணல் காட்டா!

துடிபோல் இடையோ? ஒருபிடி இடையோ?
குற்றிய லுகரத் தொலியோ? அறியேன்!
நடையோ பிடியோ? மயிலோ? அறியேன்!
நல்ல வாத்தும் நாகும் அறிவேன்!

சித்திரப் பாவையோ? இல்லை! சித்திரம்
தீட்டிய ஓவியன் கற்பனைக் கைத்திறம்
புத்தியில் இனிக்கும் புலவன் பாடல்
பொருந்து மென்முல் பெண்கட்கேன் ஊடல்?[1]

---

[1] துறை : காட்சி.

# 4

## பெண்ணோ?

பெண்ணோ? பேரெழிற் பேழையோ?—நெஞ்சே!
கண்களால் இதற்குமுன் கண்டாரே இல்லையே!

வண்ணமலர்க் காட்டுப் பூக்கள் இனந்தானோ?
வார்த்தெடுத்த பைம்பொன் அழகுச் சிலைதானோ?

சித்திர மாடத்துச் சிற்பக் கலைதானோ?
தேயா ஒளிவீசும் திங்கட் கலைதானோ?
புத்தம் புதுத்தாது கோதும் குயில்தானோ?
புயல்தவழ் மலைச்சாரல் ஆடும் மயில்தானோ?

மன்றில் நிறுத்திய மாணிக்கப் பொம்மையோ?
மாம்பழத் திடையிடைப் பொருந்திய செம்மையோ?
குன்ற மலர்த்தென்றல் அளிக்கும் குறுமையோ?
குளிர்புனல் தாமரைக் கொடியின் வளமையோ?*

---

* துறை: ஐயம்.

# 5

## பெண்ணிற் பெருந்தகை!

பெண்ணிற் பெருந்தகையே!—இவள்
பேசாத பேரெழில் அல்லவே அல்ல!— நெஞ்சே!

கண்ணின் இமையிரண்டும் கைபோல் அழைக்கக்
[கண்டேன்
காதளவோடு கெண்டைவிழிகள் மறியக் கண்டேன்

சூடிய கூந்தலில் வாடிய முல்லைத்
தொடையலைக் கண்டேன்! துயரினி இல்லை!
தேடிய பூக்கள் தன்னில் இருந்தும்
செழுங்காந் தட்கேன் இவளடி வருந்தும்?*

* துறை : துணிபு.

# 6

## புரிந்து கொண்டேனே!

கண்டு புரிந்துகொண்டேனே!—அவள்
கள்ள விழிசொல்லும் உள்ளத்துக் காவியம்

கொண்ட நோய்க்குமருந் தண்டையி லிருக்கக்
கொட்டிப் பொருளிழந் தெட்டித் திரிவதோ?

மாமலைச் சாரல் வளரும் கொடியிடை
மருந்து நோய்க்கிருக்க அருந்தா திருப்பதோ?
நாமலே யோம்இனிச் சூட்டுக்குச் சூடு
நல்ல வயித்தியம்! இதுமுதல் ஏடு!

காதல் அரிச்சுவடி கண்முதல் வீச்சாம்!
கற்றுத்தெளியக் கூட்டிப் படிப்பதும் ஆச்சாம்!
ஓதிப் பழகியபின் நன்னூலைத் தொட்டே
ஒன்றிய அகப்புற விலக்கியம் யாப்பேன்!*

---

* துறை : குறிப்பறிதல்.

# 7

## உன்னைத்தான் காண்கின்றேன்!

உன்னைத்தான் காண்கின்றேன்!—அன்பே!
உன்னைத்தான் காண்கின்றேன்!

தென்னை மரத்தோப்பிற், சிற்றோடை மலைக்காட்டில்,
என்னை மறந்தெங்கோ திரிகின்ற வயற்காட்டில்

குட்டைப் புதுமலரிற், குளத்துச் சிறுமீனில்,
வட்ட முழுநிலவில், தவழ்ந்து வருங்காற்றில்,
பெட்டை வாத்துத் தோகைப் பிடிமான் இளநாகில்
எட்டி எங்கோ விருக்கும் அன்பே! எனதுயிரே!

வண்டை விரட்டிய மலர்பார்த்த துண்டோடி?
கொண்டல் விரட்டிய மலைபார்த்த துண்டோடி?
வண்ட லிடுமாற்றை விரட்டிய நீள்கடல்
கண்ட துண்டோ? பிறர்சொலத்தான் கேட்டதுண்டோ?

கட்டுக் காவல் நமக்கிட்டே இருந்தாலும்
எட்டுத்தொகை பத்துப் பாட்டுப்போ லிருந்தோம்நாம்!
விட்டுப் பிரிந்தாய்நீ! மேலுக்கு வெளிவேடம்!
விட்டுப் பிரிந்துவிண் போன நிலவுண்டோ?

எத்தனை பேருனக் கென்னென்ன சொன்னாலும்,
எத்தனை பேரெனக் கென்னென்ன சொன்னாலும்
புத்தம் புதுத்தமிழ்ப் பாட்டே! கலித்தொகையே!
தித்திக்குஞ் செந்தமிழ்த் தேனே! அகம்புறமே!

# 8

## கருத்தை அழிக்குதே!

காலையில் மாலையில் உன் நினைவே—என்
கருத்தை அழிக்குதே! என்ன சொல்வேன்?

பாலைக் கறக்க ஆள் வருவான்—துள்ளிப்
பாய்ந்து வரும்பசுங் கன்றுக்குட்டி!

கட்டைச் சிறுதிண்ணை மீதமர்ந்தே—என்
கருத்தெல்லாம் உன்பாற் செலுத்திவிட்டே
பட்டுடற் பூனையின் மெய்வருடிக்—கூரை
பாய்ந்து வருமணில் பார்த்திருப்பேன்!

அந்தி மயங்கிற்றே! என்னுளம்போல்—மேல்வான்
அழகெல்லாம் மங்கிடக் கண்டிருந்தேன்;
பந்தியாய்க் கூட்டினைத் தேடிவரும்—புட்கள்
பார்த்தேன்; விழிகள் கலங்கினவே!

விண்மீன் எழுந்ததே! என்னுளம்போல்—வான்
ஏங்கி வெதும்பிய கொப்புளமோ?
புண்ணான காதல் உள்ளத்திற்கா—வான்
பூத்த முழுநிலா இன்பஞ் செய்யும்?

# 9

## பெண் எனக்குத் தேவை!

பெண் எனக்குத் தேவை!—தமிழ்ப்
பெண் எனக்குத் தேவை!—தீந்தமிழ்
பேசி இலக்கியச் சோலைக் களைத்தேகும்

மண்வேண்டேன்; பொருள்வேண்டேன்;
மாப்புகழ் நான்வேண்டேன்!

'உப்பில்லை; பப்பில்லை; உடையில்லை' என்றாலும்,
'தப்பில்லை; இலக்கியத் தமிழுண்டே!' என்பேன் நான்!
'இப்படித்தான் வாழ்க்கை நடத்துவதோ?' என்றென்
இன்பமனைவி சண்டைக் கிழுத்தாலும் கலங்கேன் நான்!

# 10

## அத்தை மகள்!

அத்தைமகள் என்றன்
சொத்தெனவே எண்ணி
அன்பை வளர்த்த துண்டே!—நெஞ்சில்
அன்பை வளர்த்த துண்டே!

சித்திரை மாந்தளிர் மேனியாள்!
கொத்தும் கிளிமொழியாள்!
புத்த முதாம்விழி! கொத்துமுல்லைநகை!
பூங்கொடி மின்னல் இடையாமே!—அந்த
மாங்குயில் சாயல் மயிலாமே!

ஓடைக் குளிர்தரும் இன்பத்தாள்! அந்த
ஓடை மலர்நிற வண்ணத்தாள்!
மாடப்புறு அவள்! வேடன் கைப்பட்டனள்!
மூடிற்றிருள் என்றன் வாழ்விலே!—இனித்
தேடும்பொருள் இல்லை வாழ்விலே!

# 11

## சலித்தன கண்கள் !

பார்த்துச் சலித்தன கண்கள்!—அடிக்கடி
பார்த்துச் சலித்தன கண்கள்!—என்
பைந்தமிழ் அன்பர் சென்ற வழியினை

நேற்றிரா முழுமையும் நித்திரை இல்லை!
நீள்கடல் என்னைப்போல் அடைந்தது தொல்லை!

படுக்கைச் சிறுவிளக்கும் ஏளனம் செய்யும்!
பாயும் தலையணையும் எனக்குநோய் செய்யும்!
அடிக்கடி அவர்பேச்சைக் காதொலி செய்யும்!
அறைச்சுவர் எங்கணும் நிழலுருச் செய்யும்!

காவல்நாய் வீட்டோரம் காதுகள் உதறும்!
கதவைத் திறந்துபார்த்தே என்மனம் பதறும்!
ஆவலடங்கா உள்ளம் அடுக்களை செல்லும்!
அருந்த உணவெடுக்கும்! மருந்தென்று வெறுக்கும்!

# 12

## பொதுவாகச் சொல்லடி தோழி!

பொருளுக்கு அடிமையோ ?
பொருள்நமக் கடிமையோ ?
பொதுவாகச் சொல்லடி தோழி!

வருவோர்க்கும் போவோர்க்கும் வழங்குதல்
மாண்பென்றால்
மனைமாட்சி என்னாகும் உடல்விட்டே உயிர் சென்றால்?

மனையறம் மனையாளின் வாழ்வின்றேல் நடக்குமோ?
மனையாளின் உடலாளன் மார்பின்றேல் உயிர்க்குமோ?
தினைப்புனம் வானின்றேல் என்றேனும் செழிக்குமோ?
புனைமார்பன் பிரிவினால் இல்லறம் தழைக்குமோ?

பொய்கையில் நீரின்றேல் மணமலர் பூக்குமோ?
பொற்சுடர் வானின்றேல் புலமெல்லாம் காய்க்குமோ?
கைப்பொருள் பெரிதன்று; காதலே பெரிதாகும்
கருத்தினை விளக்கடி! என்னுயிர் இங்காகும்!

# 13.

## செய்ந்நன்றி இதுதானோ?

*செய்ந்நன்றி இதுதானோ?—கோவைச்*
*செம்மூக்குப் பைங்கிளியே!*

*கையார் வளையொலிக்கக் கனிதந்து, பால்தந்து*
*மெய்யில் அணைத்தணைத்து விரும்பி வளர்த்ததற்கு*

*இரவினில் என்தன்பர் இருதோளின் மேற்சாய்ந்தே*
*உரையாடி நான்களித்த ஒவ்வொரு சொல்லுமாய்ந்தே*
*விரைமலர் சாந்தணியும் விடலை பிரிவுணர்ந்தே*
*உரைக்கின்றாய் நாணமின்றி உயிர்போவ தைமறந்தே!*

*மற்றவர் மறையினில் செவிசாய்க்கக் கூடாதே!*
*மறைவினிற் கேட்டாலும் மனத்தோடே போடாதே*
*உற்றதைச் சொல்வதோ உயர்ந்தபண் பாகாதே!*
*உப்பிட்டவரை என்றும் மறக்கவே கூடாதே!*

# 14

## போதாதோ ?

பொன்தேடச் சென்றனர் தோழி!-குடிசெய்யப்
பொன்தேடச் சென்றனர் தோழி!

என்னுள்ளம் கண்டவர், என்னை உணர்ந்தவர்
சொன்னசொற் கேட்காமல் என்னை மறந்துமே

செந்தீப்போற் செக்கரும், அந்தி மயக்கமும்,
தென்றலும் வெண்கதிர்த் திங்களின் தேக்கமும்
வந்தெனை வாட்டுதல் போதாதோ தோழி?
'வாழப் பொருள்தேவை' அறிவிலார் நீதி!

என்னிலே, உணவுண்ணு திருக்கின்ற செய்தி
எவர்கண்டார்? எனைப்பெற்ற தாயின் அநீதி!
பொன்னல்ல வாழ்க்கைக்கு வேண்டிய துள்ளம்!
போதாதோ மெய்க்காதல் எதிர்த்தேறும் வெள்ளம் ?

# 15

## பேசாத ஓவியமோ?

பேசாத ஓவியமோ?—இதுவென்ன
பேசாத ஓவியமோ ?

மூசாத இருமொக்கும் மூசிய ஒருமொக்கும்
முளைத்த குளத்தருகிற் களைத்துவந்தேன் நான் !

ஈயாத மக்களின் தீமொழியாம் இடையும்,
இடும்பசிக் கேற்றநல் உணவாம் அன்ன நடையும்,
பேயாத வானத்துப் பிறையாம் சிறுநுதலும்,
பெருக்கெதிர்த் தேறுகின்ற விழியாம் இருகயலும்,
காயாத பைம்புதர்த் தளிராம் நறுவுடலும்
கண்டேன்! இதழிலேனோ காணேன் சிறுமுதலும்!

தேனும் மொழிதந்தால் எளியேன் அதைக்கொண்டு
மானே! பொறுப்போடு அரசோச்ச வழியுண்டு!
காணுறு மலையரண் அகழிசூழ் கோட்டையைக்
கைக்கொள்ளேன்! வாய்திற! காண்என்றன் வேட்டையை!
மீனுளே! நீஎன்ன ஊமையோ? இல்லை!இல்லை!
மெல்லியலே! வாழ்வோம்! வேண்டாம்இத் தொல்லை!

# 16

## கூறுயோ?

தென்றலே! கூறுயோ?—தவழ்ந்திடும்
தென்றலே! கூறுயோ?

குன்றுநிகர் தோளன் கொல்புலிப் போத்தோடே
சென்றதே என்நெஞ்சம்! செயலைமறந்தேன் நான்!

மாமலைத் தோப்பு மலர்க்காட்டின் ஊடேபோய்த்
தேமலைத் தந்தானைத் தேடிப் பிடித்துநீ
பாமாலை பாடிப் பைந்தமிழ்ச் சுவைகூட்டிக்
காமாலை வாடுமிக் கன்னியின் காதலை

உன்னை வெறுப்பவர் உலகினில் இல்லை; கண்டாய்!
தென்னை குளங்குட்டை திரிவதில் என்ன கண்டாய்?
என்னை உரைப்பதில் உதவியின் இன்ப முண்டாம்!
இன்னே விரைந்திடு! வாழ்த்துண்டாம்! வாழ்த்துண்டாம்!

# 17

## கேட்டாயா செய்தி?

*கேட்டாயா செய்தி?—தோழி!*
*கேட்டாயா செய்தி ?*

*தோட்டத்தில் வந்துநின்று தொடர்ந்தே எனைஇறைஞ்சி*
*கூட்டம் விழைந்தவந்தக் கொல்லேற்றின் ஒழுக்கத்தைக்*

*சேரிப் பரத்தையிடம் சென்றான் எனவறிந்தும்*
*தெருவழி பார்த்துப்பார்த்தே கண்கள் மிகவருந்தும்!*
*உருவினை அப்படியே உரித்து மகன்பிறந்தும்*
*ஒழுக்கமிலா அன்பன் நினைவால் மனம்வருந்தும்!*

*பூத்த மலர்ப்பொய்கை பரத்தையோ டன்று*
*புதுப்புனல் ஆடிய செய்தியை இன்று*
*பார்த்தவர் கூறினர்; 'அவனல்லன்' என்று*
*பரிந்து வழக்குரைத்தேன்! திருந்துவ தென்று?*



பா. பி.—2

# 18

## உணர்ந்தான் இலேயே!

என்னை உணர்ந்தான் இலேயே!—தோழி!
என்னை உணர்ந்தான் இலேயே!

அன்னை உணர்ந்தனள்; அவனைத் தெரிந்தனள்!
'தென்னை சிறுதோப்புச் செல்லாதே' என்றனள்!

'தீம்புனல் ஆ'றென்றால்,'செழும்வெள்ளம்' என்கின்றாள்;
'செந்தாமரை' என்றால், 'உன்கைப்பார்' என்கின்றாள்;
வேமஉயிர்த் தன்மையை அன்னைக்கோ, அவனுக்கோ
விளக்கடி! என்னுயிர் இன்றைக்கோ? நாளைக்கோ?

காரிருள் மிகவுண்டு! கதவினில் தாழுண்டு!
காற்றடித் தாலும்போதும்! அன்னைக்கோ விழிப்புண்டு!
வேரிற் பழுத்தபலா வீணே அழியுமுன்பு
விருந்திற்கிங் கேற்பாடு செய்யென்று சொல்கென்று!

# 19

## ஆடக் கண்டேன் !

*கண்டேன்! அவளாடக் கண்டேன்!—தோழி!*
*கண்டேன்! அவளாடக் கண்டேன்!—அவள்*
*கைவிரல் அசைவிற் காந்தள் மலர்பூக்க*

*கெண்டைவிழி வள்ளைக் காதள வோடிச்*
*திங்கள்பிறை மறிந்து செல்வதை இங்குநான்*

*மலைவளர் மூங்கில் சடையொடு நெளிய*
*மணிமுத் தாரம் முலைமேல் அசையக்*
*கொலைவிழி யாலென் உள்ளம் குழையக்*
*கொட்டு முழவோடு தாமரை இழைய*

*நொந்த இடையைச் சாய்ந்து தந்தங்கள் பார்க்க*
*நூறுமுறை பாயும் வேல்விழி உயிர் போக்கச்*
*செந்தமிழ் அடைவோடு தாளங்கள் ஆர்ப்பச்*
*சித்திரப் பாவை நெஞ்சில் ஆடினாள் உடல் வேர்ப்ப!*

# 20

## அதோ வந்தான்!

வந்தான்! அதோ வந்தான்!—என்றன்
மலருடல் இயக்கம் அவனே!—தோழி!
வந்தான்! அதோ வந்தான்!

செந்தேன் அவன்மொழி! செழுஞ்சுடர் அவன்விழி
திரண்ட தோள்கள் தீஞ்சுனை மலைவழி!

பண்டைய மறவன்; பைந்தமிழ் வேந்தன்;
கொண்டல்போல் எவர்க்கும் கொடுக்கும் கையான்;
தண்டமிழ் அறிந்தோன்; தமிழ்ப்பண் புணர்ந்தோன்;
தன்மதிப் புடையோன்; தமிழ்காப் பாளன்!
அண்டையில் இருந்தால் அதுவே போதும்!
அளவிலா இன்பம் அவனெப் போதும்!

# 21

## திரும்பச் சொல்வாயோ ?

கண்டால் திரும்பச் சொல்வாயோ?—கவின் நிலவே!
கண்டால் திரும்பச் சொல்வாயோ ?

அண்டை அயலாரிடம் அவனுற் படுந்துயரை
அப்படியே சொல்ல எப்படிப் பெண்ணாலாகும்?

வெள்ளிக் குழம்பின்தேக்கம் மெல்லத் தளும்பும்ஏரி
மேற்கரை போய்ச்சுற்றி வந்தோமே ஊர்ச்சேரி!
கள்ளன் அவன்செய்த குறும்புகள் இன்பம்! இன்பம்!
கண்முன் நிழலாடி வாட்டுதே துன்பம்! துன்பம்!

காயும் முழுநிலவில் காற்றுடும் மாடியில்
வாயில்லை என்னிடை வம்புத்தனம் பட்டதை
நீயுந்தான் பார்த்திருந்தாய்! நினைத்தாலே வெட்கம்!
வெட்கம்!
நெஞ்சுக்குள் ஏங்கிஏங்கிச் சாகிறேன் நித்தம்! நித்தம்!

# 22

## கொல்லாதே!

*நிலவே! கொல்லாதே!—முழு*
*நிலவே! கொல்லாதே!*

*தலைவனைப் பிரிந்த தலைவியைத் தீய்த்தல்*
*சரிசரி உணர்ந்தேன் என்னுயிர் மாய்த்தல்!*

*எங்கோ பிறந்தாள்; என்னுயிர் கலந்தாள்;*
*ஈருடல் ஒருயி ராகவே வாழ்ந்தோம்;*
*திங்களே வயல்வெளி குளக்கரை திரிந்தோம்;*
*செழும்புனல் ஏரி மதகினில் களித்தோம்!*
*அங்கெலாம் நீயன்றி வேறார் துணைக்கே?*
*அழியா ஓவியம் அவளென் விழிக்கே !*
*இங்குநான் தனியாய் இருப்பதைப் பார்த்தே*
*என்னுயிர் அணுஅணு வாகநீ பறித்தே!*

# 23

## உன்னோடு ஒரு நாள்!

உன்னோடு ஒருநாள்! அந்நாள் நன்னாள்!
பொன்னேடு! திருநாள்! புதுநாள்! முதல்நாள்!

மின்னோடு மாமதி மலைமுங்கில் அடைத்தேன்
தன்னீ(டு) இடைமுகம் தடைக்கைசொல் கண்டேன்!

திருக்கோவை சுவைத்திட்ட தில்லையில் அன்று
'செந்தமிழ் விளக்'கென்றாய்; ஆயிரம் நின்று
சுருக்கமாய் விளக்கினேன்; தொகைநூலை நன்று
தோழியருடன் சுவைத்தாய்! மறப்பேனோ இன்று?

வழிகூட்டி அனுப்பநீ வந்தாயே மாலை!
மயங்கிய இருட்டிற்கோ யார்தந்தார் ஓலை?
செழியனின் நாட்டிலே தீந்தமிழ்ச் சோலை
தீக்கிரை யாவதோ? எடடி!நீ வேலை!

நந்தனார் பெயர்கேட்டேன்! எந்தையர் வீட்டை
வந்தவர் கெடுத்தனர்! தமிழரின் கேட்டை
எந்தநாள் உணர்வாரோ? அன்றல்லோ ஓட்டை
இல்லா தொழிந்திடும்! அடைவோம்நம் நாட்டை!

# 24

## போதுமடா!

மகனே! போதுமடா!—நீயென்
வயிற்றிற் பிறந்தபின் நான்பெற்ற மகிழ்ச்சி!

அகங்கைத் தேனாய் அன்றிருந் தேனே!
அகங்கைத் தேனாய் இன்றா னேனே!

உன்னைப் பெறுமுன் நான் உன்னைக்குக் கரும்பாம்!
உனைப்பெற்ற பின்போ உன்னைக்கு வேம்பாம்!
என்சொல் விழியோ இன்ப விருந்தாம்!
இப்பொழு தோநான் குமட்டும் மருந்தாம்!

அன்றுநான் தென்றற் குளிர்பூஞ் சோலை!
இன்றுநான் தீய்க்கும் மணல்வெளிப் பாலை!
குன்றினை உடைக்கும் உன்னப்பன் தோளைச்
சூம்பிய தோளென்று சொல்வாய்நீ நாளை!

# 25

## வார்த்தைகள் போதாவே!

மகள்படுந் துயரை வாய்விட்டுச் சொல்ல
வார்த்தைகள் போதாவே!—என்

பகலில், இரவில், பால்நிலா வொளியில்
பாய்சுடு தென்பாள்! அணைசுடு தென்பாள்!

சந்தில் இருக்க வேமனங் கொண்டாள்!
சந்தில் இருக்க வேமனங் கொண்டாள்!
வெந்தீச் சுடர்தீய்க்கும் மாலையில் வந்தாள்!
வெந்தீச் சுடர்தீய்க்கும் மாலையில் வந்தாள்!

செப்புக் கிடைக்காத வருத்த மொழியென்றேன்!
செப்புக் கிடைக்காத வருத்த மொழியென்றாள்!
இப்பாலு மருந்தென்னும் கைக்கொண்டாள் வாயே!
இப்பாலு மருந்தென்னும் கைக்கொண்டாள் வாயே!

# 26

## எப்படி நான் மறப்பேன் !

எப்படி நான் மறப்பேன்?—தோழி!
எப்படி நான் மறப்பேன்?

உப்புக் கடற்றுறை ஓரம் மறைந்திருந்தான்!
ஓசை அலைபார்த்துப் பேசாது பேசிநின்றான்!

வலைதந்த சிறுகெண்டை மீன்கண்டு நின்றான்!
'வலைபடாக் கெண்டையின் விலையென்ன?' என்றான்!
தலையினைத் தாழ்த்தினேன்! அருகினில் வந்தான்!
'தடங்கடற் பெருங்கூந்தல் அலைபட்டேன்' என்றான்!

பூத்த கழிநீலம் பூக்கள் பறித்திருந்தேன்!
'பொல்லாத செய்கை! விழிகொல்லாதே!' என்றுரைத்தான்!
வார்த்தையிற் சூரனடி! வளைதந்த பல்முத்தம்
கோத்தணி கின்றேன்; முன்கொடு என்றான் ஒருமுத்தம்!

# 27

## காதல்

காதல்! காதல்! காதல்!—எங்கும்
காதல்! காதல்! காதல்!

கடுந்தீ மண்ணும் கடல்வான் காற்றும்
கலந்த மயக்கம் உலக மெங்கும்

மோதும் அலைகள், முன்னுள்ள மலைகள்,
முட்புதர்த் தாழை, புன்னைக் கிளைகள்,
தீதில் சிறுகுடி, பரதவர் இல்லம்,
சிறுசிறு உப்பங் கழியாம் பள்ளம்—எங்கும்

பசுமலை போர்த்த பனிமலை பாராய்!
பாடும் வண்டின் விருந்திசை கேளாய்!
விசும்பில் எழுந்த மலையிடைத் தூங்கும்
விளைந்த தேனை விழிகள் டேங்கும்!—எங்கும்

மின்னல் இடியும், வானப் பெயலும்,
வீரங் காட்டும் பெரும்போர்ச் செயலும்,
சின்ன நிலவும், தென்றற் காற்றும்,
செழும்புனல் ஆறும், தெளிநீர் ஊற்றும்—எங்கும்

உண்ண விளைக்கும் நன்செய் வயல்கள்,
ஒளிப்புனல் துள்ளும் அழகுக் கயல்கள்,
மண்ணைப பறிக்கும் நீளசெவி முயல்கள்,
வழிபார்த் தேங்கும் பேடையின் செயல்கள்,-எங்கும்

குப்பையைக் கிளறும் கோழியின் ஊடல்,
கூண்டிருந் திசைக்கும் குருவியின் பாடல்,
உப்பிய கழுத்துத் தோகையின் ஆடல்,
உன்விழி என்விழி அடிக்கடி கூடல்,—எங்கும்

# 28

## காண்போம் வா!

வா அன்பே! வா! காண்போம் வா—மலைச்சாரல்!
வா அன்பே! வா! காண்போம் வா!

பாவாணர் போற்பாடும் வண்டோசை கேட்டாற்
பசிக்கேது வேலை இசையயில் சாலை?

பூவாத வேங்கையும், புள்ளிமான் கூட்டமும்,
பூத்துக் குலுங்கும் கொன்றைஆச்சாவின் ஈட்டமும்,
கூவாத குயிலுச்சி விரைந்தோடும் ஓட்டமும்,
கொண்டை மயில்தோகை விரித்தாடும் ஆட்டமும்

கழையேறிக் கூத்தாடும் கள்ளுண்ட மந்தி!
கண்டு களித்திருக்கும் ஆண்கிளை குந்தி!
ஒழுகும் மலையருவி முழவார்க்கும் அந்தி!
ஒப்பிலா ஓவியம் சாய்கதிர்ச் செந்தீ!

# 29

## போகவில்லை!

தேய்ந்து வளர்ந்து குறைந்திருந்தும்—உன்
சின்னத் தனமேனோ போகவில்லை?

ஆய்ந்துநீ பார்த்ததுண்டோ?—பால்ஒளி
அத்தனையும் இரவல்!

தனித்த பெண்களுக்கோ ஒளியால்
தணலைப் பாய்ச்சுகின்றாய்!
மனித்தப் பிறவியிலும் உனைப்போல்
வஞ்சகர் உண்டு; கண்டேன்!

இணைந்தவர் முன்வெட்கி ஓடும்
இழிசெயல் நாடறியும்!
அணைந்து ஒளியடைந்தும், நிலவே!
அப்புத்தி போக வில்லை!

# 30

## நான் பிறந்த நாள்

நான் பிறந்த நாள், என்ன
வான் பிறந்த நாளோ?
ஏன் பிறந்தேன் நான்?

தேன் பிறந்த நாட்டில்,
செந்தமிழ் பிறந்த நாட்டில்
நான் பிறந்தே சொந்த
நாட்டிற் கென்ன செய்தேன்?
ஏன் பிறந்தேன் நான் ?

மலை பிறந்த ஆற்றில்
கிளை பிரிந்தே ஊட்டும்!
கலை பிறந்த திங்கள்.
காரிருளை ஓட்டும்!
ஏன் பிறந்தேன் நான்?

கான் பிறந்த பூவில்
தேன் பிறந்த தாலே
வான் பரப்பில் எங்கும்
வண்டினிசை கேட்கும்!
ஏன் பிறந்தேன் நான்?

குளம் பிறந்த ஆம்பல்,
நிலம் பிறந்த முல்லை
உளம் களிக்கப் பூத்தே
உயர் மணத்தை நல்கும்!
ஏன் பிறந்தேன் நான்?

பெயல் பிறந்த ஏரி,
கயல் பிறந்த நன்செய்,
வயல் நிறைந்த சிற்றூர்
மக்கள்பசி ஆற்றும்!
ஏன பிறந்தேன் நான்?

கடல் பிறந்த முத்து,
கழிப் பிறந்த உப்பு,
மடல் பிறந்த தாழை
மற்றவர்க்காய் வாழும்!
ஏன் பிறந்தேன் நான்?

# 31

## அன்ருெரு நாள்

வாழ்வில் அன்ருெருநாள்—என்
வனிதாமணி இதழ்த்தேனைச் சுவைத்த துண்டே!

யாழினும் இனியாள்; யாதினும் உறைவாள்;
ஊழென என்னுடல் வீழினும் தொடர்வாள்!

கண்ணினில் ஆடுமென் கண்மணி யவளே!
விண்ணிலும் மண்ணிலும் விதவித உயிரவள்!

மறந்திட எனக்கே வலிஇல்லை அவளை!
உறைந்துறைந்(து) என்னுடல் உயிருள் நிறைந்தனள்!

கதைபல சொல்வாள்;என் கவிக்கொளி தருவாள்!
இதயமாய் உடலுயிர் இயக்கும் கலாவல்லி!

# 32

## தமிழ் வாழ்க!

*வாழ்க! வாழ்கவே!—தமிழ்*
*வாழ்க! வாழ்கவே!—மக்கள்*
*உளமும் வாயும் இனிக்குந் தீந்தமிழ்*

*சூழ்ந்த மொழியுள் தமிழே தாயாம்!—மண்*
*தோன்றிய நாளே தோன்றியதாம் தமிழ்!*

*ஆரியச் சித்திய மொழிகளுக் கெல்லாம்*
*ஆணிவேர் நம்மருந் தமிழே! கண்டாய்!*
*பாரினில் இதைப்போற் கன்னியாய் என்றும்*
*பல்லாண்டு வாழ்ந்த மொழியுண்டோ? சொல்வாய்*

*இந்தா, இதைக்கேள் என்னருந் தோழா!*
*இன்றமிழ்ப் பகையெலாம் உன்னுயிர்ப் பகையாம்,*
*அந்தந்த நாடும் அந்தந்த நாட்டார்*
*ஆளல் முறையென வாளேந்தி விட்டார்!*
*வந்த பகைகண்டு, சொந்த மொழிமறந்து*
*வாய்பொத்தி இருப்பதோ? வாளேந்திப் புறப்படு!*
*சொந்தமாம் தமிழகம்! தாயகம்! ஆம்! ஆம்!*
*சூரப்புலி மகனே! எழு! எழு! எழுந்திரு!*

# 33

## தமிழ் வெல்க!

தமிழ் வெல்க! தமிழ் வெல்கவே!—கன்னித்
தமிழ் வெல்க! தமிழ் வெல்கவே!

அமிழ்தின் இனியமொழி; அன்னை யன்னையின்மொழி;
அறுபத்து நான்குகலை, அகம்,புறம் தந்தமொழி!

எண்ணஎண்ண இனிக்கும் இலக்கியம் மிகுந்ததே!
எழுத்துச் சொல்பொருள் யாப்பணியாற் சிறந்ததே!
பண்ணொடு யாழ்மீட்டிப் பாட உகந்ததே!
பண்பும் நிறைந்ததே! அன்பை வளர்த்ததே!

ஊனில், உயிரில் இன்பமூட்டி வளர்ப்பதாம்!
ஒண்பொருள் கல்விகேள்வி ஒழுக்கத்தைச் சேர்ப்பதாம்!
வானின் உயர்ந்ததாம்! கடலினும் ஆழ்ந்ததாம்!
மக்கள் மனைவிநலம் மிக்கதாம் மிக்கதாம்!

# 34

## நீ வாழ்வாய்!

தமிழ் தாழ நீ தாழ்ந்தாய் தம்பி!—கன்னித்
தமிழ் வாழ நீ வாழ்வாய் தம்பி! தம்பி!

இமியும் கலங்காதே! எதிர்ப்புக்கோ அஞ்சாதே!
இன்றமிழ் ஏற்றமே உன்னாட்டின் ஏற்றமாம்!

மொழிவாழ இனம்வாழும்; இனம்வாழ நாடுவாழும்!
முத்தமிழ்ப் பெருநாட்டின் பொற்காலம் நினைத்துப்பார்!
அழிவேற்ற தேன்,எதனு லென்றே சிந்தித்தால்
அடைவோம்நாம் நம்நாட்டை நமக்குள்நாம்
[மனமொத்தால்!

காந்தளூர்ச் சாலையிற் கலங்க எறுத்ததுண்டு!
கடலினைத் தாண்டிப்போய் வெற்றி யடைந்ததுண்டு!
சோர்ந்தவர் அல்லர்நாம்; சூரப்புலிக் கூட்டம்!
தூக்கம் தெளிந்தா லிங்கே நிற்குமோ நரிக்கூட்டம்?

# 35

## ஆளுகை உன்னதடா!

அஞ்சாதே தமிழா!—நீ
அஞ்சாதே தமிழா!

தஞ்ச மெனஒரு நாளும் பிறர்க்கீழ்த்
தலைசாய்த்திடு வழக்கம்
நஞ்சினுங் கொடிதென நெஞ்சத்திற் காத்தான்
நம்நாட்டுத் தமிழன்!

மஞ்சு பொழிந்து உயிர்க்குண வாகி
மாநிலங் காத்திடுதே!
சஞ்சல மெதற்கு? இயற்கையாம் அன்னை
தருவளுன் பசிக்கே!
கொஞ்சிடு மக்கள் மனைவி முகத்திற்
குலவிடு புன்முறுவல்
வஞ்சகர் நெஞ்சைப் பிளந்திடு வன்மை
வாளெனப் பெற்றுவிட்டாய்!
கஞ்ச மலர்முகத் தமிழ்த்தாய் வாடக்
காணு திருப்பாயோ?
அஞ்ச லில்லை;இனித் தனித்தமிழ் நாட்டின்
ஆளுகை உன்னதடா!
நெஞ்சினில் வீரம், கையினில் வில்மீன்
நீள்புலிக் கொடியுயர்த்தி
அஞ்சலி செய்வாய் தமிழா! தமிழர்
ஆவியின் சின்னமதே!

# 36

## பெற்றுவிட்டோம்!

விடுதலை பெற்று விட்டோம்!—நாமே
விடுதலை பெற்றுவிட்டோம்!

அடிமைப் பெருங்கடல் அலைபட் டிருந்தவர்
அன்புப் பெரும்புணை கொண்டு கடந்து

ஏற்றம் உயர்வென்ற சாதிகள் மாயும்!
ஏழை பணக்காரன் உயர்வற்றுத் தீயும்!
சேற்றை உழுகின்ற உழவனும் ஓர்நாள்
மக்கள் விரும்பிடில் ஆள்பவ னவான்!

நல்ல கலை,தொழில் தேடிக் குவிப்போம்!
நாட்டை வளமாக்கி அல்லல் தவிர்ப்போம்!
கல்விக் கரையினைக் கண்டு பிடிப்போம்!
காளைகள் யாவரும் தோளை வளர்ப்போம்!

மற்றவர் நம்நாட்டைக் கண்டு வியக்க
வலிமையும் வளமையும் மலிய நிறைப்போம்!
பற்றுண்டு நமக்கெனில் அதுநம் நாடே!
பல்லாண்டு பாடுவோம்; வாழ்கநம் நாடே!

# 37

## ஆடுங் கூத்து!

*அன்னை! அன்னை! அன்னை!*
*ஆடுங் கூத்தைக் காணின் மனவிருள்*
*ஓடும், ஓடும், ஓடும் விரைந்தே!*

பொன்னை உருக்கிக் கதிரின் வழியாய்ப்
புவிவாழ் உயிரெலாம் தன்னிற மாக்கி
மின்னி ஒளிரச் சிறுநகை பூத்து
விதவித மலருள் குளிர்முகங் காட்டி

மாலை எழிலுடைத் தொடுவான் அலைய
மலைதவழ் கருமுகில் கூந்தல்வான் தவழச்
சாலைக் குயில்வாய் இசையமு தீந்து
சலசலத் தோடும் அருவியில் மிதந்து

சூடிய மலர்கள் வான்பரப் பெங்கணும்.
சூழ இருள்திரை கிழித்தவள் கொளுத்தும்
வாடாத் திங்கள் தண்ணொளி அரங்கில்
வளைக்கரம் சுழல்விழி நொடித்துடல் குலுக்கி

கொடுநகை வானில் இடியை முழக்கும்
கூர்விழிப் பார்வை உயிர்ப்பறி மின்னல்
இடைநொசிந் தசையைச் சூறை பிறக்கும்
இதழடிப் பெயர்ப்பில் உலகமே கலங்கும்!

# 38

## இயன்றதைச் செய்க!

இந்த நாட்டினிற் பிறந்ததற்காக—நீ
இயன்றதைச் செய்ய வேண்டும்!—நாட்டிற்(கு)
ஏற்றதைச் செய்ய வேண்டும்!

சொந்தமனை வீடு தோட்டந் துரவு யாவும்
தந்தது யாரெனச் சிந்தித்துப் பார்த்த துண்டா?

வேலியும் காலியும் விளைநில நன்செய்யும்
வெண்ணிலாப் போலவே விண்சுழல் கோளமும்
நூலாடை பொன்னணி நுண்பொறி ஆக்கமும்
நூறுநூறு தலைமுறை தோளுழைப் பல்லவோ?

மற்றவர் உழைப்பினால் வளம்பல பெற்றோம்நாம்!
மற்றவர் உழைப்பினால் வாழ்க்கையில் உயர்ந்தோம்நாம்!
இற்றைநாள் நம்கடன் ஈன்றதாய் நாட்டிற்கே!
இருப்பதைத் துய்ப்பதை என்றென்றும் மறப்பதோ?

# 39

## பாரதி நாள்

இன்றே பாரதி நாள்!—நீ
எழுவாய்! அவர்பெயர் தொழுவாய்! தமிழா!

குன்று நிகர்த்திடு தோளைக் குலுக்கிக்
குறுநகை தவழ மீசை முறுக்கி

எழுதி எழுதித்தமிழ் இன்கவி குவித்தே
ஏழையும் அரசனும் நீயென மதித்தே
உழுது பயிர்விளைப்போர் உயிரினைக் காக்கும்
ஒப்பில் கடவுளென வணங்கித் துதித்தே

ஆற்ற லன்புடல் ஆக்கம் வளர்த்தே
அணியிழை மடவார் அடிமை தவிர்த்தே
ஏற்றம் உயிர்க்கே விடுதலை வாழ்வாம்
இன்னே விரைந்ததைச் சிக்கெனப் பிடித்தே

நாட்டுக் குடையவர் நாமென அறிந்து
நம்மவர் அன்றிப் பிறராளச் சினந்து
கோட்டமில் அறநெறி வழியில் நடந்து
குறுமன மூடப் பழக்கத்தைக் கடந்து

# 40

## அதோ பாரடி !

அதோ பாரடி!—பெண்ணே!
அதோ பாரடி!—நீ
அதோ பாரடி!

புதுப்பரிதி இளம்பரிதி
பூத்ததைப்பார் கீழ்க்கடல்மேல்!—அதோ

மத்தளம்போல் முட்பலாவும்
வாழைமாங் கனியுங்கொண்டு சேர்த்தோம்!
புத்தம்புதுப் பொங்கலுண்டே ஆர்த்தோம்!
தித்திக்கும் கரும்புவெட்டிச் சாய்த்தோம் நாம்!—
[அதோ

வந்தவர்க்கும் போனவர்க்கும்
வாரிவாரித் தந்துமகிழ்ந் துண்டோம்!
நந்தமிழும் நீள்கடல்மேல் வந்ததைப்பார்!
நம்மவர்கள் வாழ்த்துவதைக் கண்டோம் நாம்!—
[அதோ

# 41

## புதுப் பெண்ணே!

மணமான புதுப்பெண்ணே!
இளமானே! என்கண்ணே!—முத்தே!
மனத்தில்வை என்சொல்லே!
வற்ருத வளமான சொத்தே!

துணைவனின் துணையோடு
தொடங்குகிருய் புதுவில்லம்!—அன்புத்
துணைகொண்டால் வாழ்வினில்
தோய்ந்திடுமே இன்ப வெள்ளம்!

அத்தானின் தாய்தந்தை
புத்தில்லத் தாய்தந்தை!—போற்றே!
அத்தையின் முன்னெழுந்(து)
ஆளன் குறிப்புணர் ஊற்றே!

சிரித்த முகத்தோடு
சிட்டைப்போல் வேலைகள்—செய்வாய்!
உரித்த பலாச்சுளை
உரையாடல் என்றென்றும் கொள்வாய்!

எத்தனை இன்னல்கள்
எதிரெதிர் வந்தாலும்—தள்ளு!
புத்தகம் போலிரு!
பொறுமையும் அறிவும்மேற் கொள்ளு!

ஆளனுக் கேற்ற
அறிவுரை சொல்ல—அஞ்சாதே!
கோளாறுக் கஞ்சிக்
குடித்தனம் செய்யக் கெஞ்சாதே!

வீட்டாரும் நாட்டாரும்
மெல்லிசை யாழே!—என் கண்ணே!
காட்டிப் புகழ்வதே
வீட்டுக் குடித்தனம் எண்ணே!

# 42

## அன்றும் இன்றும்

எப்படியோ பிறந்தே
எப்படியோ வளர்ந்தே
எப்படியோ மடிந்தே
போகின்றான் மனிதன் அந்தோ!
அன்றும் இன்றும்

இப்புவிக்கே உழைத்தான்;
எண்ணி எண்ணிக் களித்தான்;
ஒப்பிலா அறிவினால்
புதுமை உலகளித்தான்!
அன்றும் இன்றும்

கத்தும் கடல் அடக்கிக்
கார் தவழ் வானடக்கிச்
சுற்றிச் சுழலும் கடல்
சூழும்உல கடக்கி
அன்றும் இன்றும்

உலகினைச் சுற்றுகின்றான்;
ஒளிச்சுடர் காணுகின்றான்;
அலைகடல் மூழ்குகின்றான்;
அறிவினால் யாவும் வென்றான்!
அன்றும் இன்றும்

# 43

## ஓடைக் கரையினிலே!

ஓடைக்கரையினிலே—அன்றொருநாள்
ஓடைக்கரையினிலே
தேடியலுத்துத் திசைபார்த்திருந்தேன் நான்!

ஆடிய பூக்களில் ஆடிய தென்றல்போல்
ஓடியே வந்தென் உடலைத் தழுவினாய்!

அந்தி மயங்கிய செந்தீச் சுடர்வானம்
வெந்து தணிந்தது! குந்தி இருந்தோம் நாம்!
சிந்தை இனிக்கவே சிறுகுயில் பாடிற்று!
சேவலைக் காணாது பேடையும் கூவிற்று!

பூக்கள் உதிர்ந்தன! புதுநிலா வந்தது!
புத்தம் புதுமலர் ஓடையில் பூத்தது!
ஈக்கள் மதுஉண்டே இசைமீட்டிப் பாடின!
எழுந்தோம்; நடந்தோம்! எப்படி மறப்பதோ?

# 44

## ஆடு குழந்தாய்

ஆடு குழந்தாய்!—சாய்ந்(து)
ஆடு குழந்தாய்!

அன்பின் பெருவிளைவே!
இன்ப இருப்பிடமே!

ஓடைப் புதுமலர்த் தாமரை நீ!
ஓவியன் தீட்டாத சித்திரம் நீ!
கோடைக் குளிர் தென்றல்!
கொத்து மலர் முல்லை!
கொஞ்சும் கிளிப்பிள்ளை நீ குழந்தாய்!

கையைக் கொட்டிச் சாய்ந்தாடு!
காதல் கனியே! நீ சாய்ந்தாடு!
மையிட் டெழுதிய
வண்டு விழி தூக்கி
மலர் வாய்திறந்து நீ சிரித்தாடு!

# 45

## யாழ் எடுத்து மீட்டிப் பாடு !

*யாழ் எடுத்தே மீட்டிப் பாடு!—கண்ணே!*
*யாழ் எடுத்தே மீட்டிப் பாடு!*

*சூழும் கவலை மாயும்!*
*இன்பம் மனத்தில் தோயும்!*

*முன்னவர் தென்னவர் முடிமன்னர் மூவேந்தர்*
*என்னரும் மகளே! கன்னல் தமிழ் வளர்த்தார்!*
*இந்நாள் 'தமிழ்காக்க எழுவோம் எழுவோம்'*
[என்றே
*சொன்னாலும் கேளாத சோம்பர்க் குணர்வூட்ட*

*கல்லும் குகையும் தமிழ்க்கலையின் விளக்கம் காட்டிச்*
*சொல்லும் கதைகள் தமிழ்சொல்லும்*
*கதையல்லவோ?*
*மல்லாரும் தோள்மறவர் வாழ்ந்த தமிழகத்தில்*
*செல்வம் பெருகவென்றும் செந்தமிழ் வாழ்க*
*வென்றும்*

# 46

## ஆடும் மயில்போல் ஆடு!

ஆடும் மயில்போல் ஆடு!—குழந்தாய்!
ஆடும் மயில்போல் ஆடு!
அழகுக் குயில்போல் பாடு!—பாடு நீ!

ஓடையில் பூத்த தாமரை முகம் காட்டி
ஒளிவிழிக் கேற்ற கருமை இமை தீட்டி

அன்னை பிறந்ததும் உன் தமிழ் நாடே;
அப்பன் பிறந்ததும் உன் தமிழ் நாடே;
முன்னோர் பிறந்ததும் உன் தமிழ் நாடே;
முல்லைக் கொடி நீ பிறந்ததும் தமிழ் நாடே;'
கைகூப்பி 'வாழ்க தமிழ் வாழ்க' வென்றே

திங்கள் பிறை வியர்க்கச் சேல்விழி காதோட
அங்கம் அசையச்செவ் வல்லி இதழ் சிரிக்கத்
தங்கப் பதுமைஇரு தாள் தூக்கி ஆடுதல் போல்
எங்கள் குலக்கொடியே! இன்பச் சிறு குழந்தாய்!
கைகூப்பி 'வாழ்க தமிழ் வாழ்க' வென்றே

# 47

## எவர் தந்தார் ?

இந்த உலகினில் இருக்கும் பொருளெல்லாம்
எவர் தந்தார்? தொழிலாளர் தந்தார்!
அந்நாள் முதல் இந்நாள் வரை

எந்தப் பெருநாடும் இந்தத் தொழிலாளர்
தந்த உழைப்பிலேயேல் குந்தி அழுதிடாதோ!
அந்நாள் முதல் இந்நாள் வரை

செந்நெல் விளைத்தவர் யார்? சிற்றூர் சமைத்தவர் யார்?
கன்னல் விளைத்தவர் யார்? காட்டை அழித்தவர் யார்?
பொன்னை விளைத்தவர் யார்? புதுவாழ்வு தந்தவர் யார்?
மின்னல் தவழும் வானவெளியினை வென்றவர் யார்?
அந்நாள் முதல் இந்நாள் வரை

ஆடை அளித்தவர் யார்? அணைகட்டித் தந்தவர் யார்?
ஓடை கலக்கும் கடல் ஊர்மூழ்கிச் சென்றவர் யார்?
கோடி கோடியாய்ப் பொருள் செய்துகுவித்தே நாட்டின்
கொடுமை வறுமை மாற்றி வளமை அளித்தவர் யார்?
அந்நாள் முதல் இந்நாள் வரை

# 48

## எப்படி?

கருத்தைக் கவர்ந்தவன் கண்ணில் இருக்கையில்
கண்ணை மூடுவ தெப்படி?—அடி
கட்டிக் கரும்பே ! நீ செப்படி!
இரவும் பகலும் உறக்கம் வரவில்லை;
எத்தனை நாளைக்கு இப்படி?—அடி
ஏந்திழையே! நீ செப்படி!

கட்டி அணைத்தவன் கண்ணில் இருக்கையில்
கண்ணை மூடுவ தெப்படி?—அடி
கார்குழலே! நீ செப்படி!
பட்டப்பகலும் இரவுபோல் ஆனதே;
பாசம் மறப்பதும் எப்படி?—வெள்ளிப்
பால்நிலவே! நீ செப்படி!

முத்தம் அளித்தவாய் கண்ணில் இருக்கையில்
மூடுவது கண்ணை எப்படி?—அடி
முல்லைக் கொடியே! நீ செப்படி!
நித்தம் நித்தம் நானே செத்து மடிகிறேன்;
நினைவிலா திருப்பதும் எப்படி?—என்
நேசக் கிளியே! நீ செப்படி!

# 49

## பறந்து செல்வாய் கிளியே!

பறந்து செல்வாய் கிளியே!
மறந்த அன்பன் நாட்டைத் தேடிப்
பறந்து செல்வாய் கிளியே!

'மறைந்த நிலவு முளைக்கு முன்னே
மல்லிகைப் பூ பூக்கு முன்னே
இறந்துபோவாள் ஒருத்தி' என்றே
இடித்துச் சொல்லக் கூவி விரைந்து
பறந்து செல்வாய் கிளியே!

குன்றம் ஆடித் தேனை உண்டான்;
கொடியில் பழுத்த கோவை உண்டான்;
'என்றும் பிரியேன்' என்றான்; நின்றான்;
இடைய ணைத்தான்; உயிர்ப றித்தான்!
பறந்து செல்வாய் கிளியே!

'முல்லைக் காடு பற்கள்' என்றான்;
முகத்தில் முகத்தை மறைத்து வைத்தான்;
அல்லிக் காடாம் உதட்டில் பற்கள்
அழுத்தி அழுத்தி உயிர்ப றித்தான்!
பறந்து செல்வாய் கிளியே!

'வாய்க்கால் ஆட வருக' என்றான்;
வாய்க்கால் ஆடி மறந்து சென்றான்;
வாய்க்கால் ஆடி அடைந்த இன்பம்
மறந்தான்! அழிந்தேன்; அடைந்தேன் துன்பம்!
பறந்து செல்வாய் கிளியே!

# 50

## வாழைத் தோப்பு

நல்ல தோப்பு—வாழைக்
கொல்லைத் தோப்பு!

இல்லுக்கு முன்னும் அன்றி இல்லுக்குப் பின்னும்
இருக்கின்ற வாழைகள் குலைஈன்று தள்ளும்!

எத்தனை எத்தனை இனிய பழங்கள்!
எத்தனை எத்தனை பசுமை இலைகள்!
எத்தனை எத்தனை இளைய குழந்தைகள்!
எத்தனை எத்தனை பூத்தொடு நார்கள்!

குலைவிட்ட வாழைகள் குடும்பத் தலைவன்;
குடும்பத்தை வாழ்விக்க வந்த முதல்வன்
இலையிட்ட கன்றுகள் இன்பச் சிறார்கள்;
எதிர்கால உலகமும் இல்லும் காப்பார்கள்

# 51

## அகங்கைத் தேன்

தலையைத் தாழ்த்தி நாணிக் கோணிச்
சாய்ந்திருப்பதும் ஏனோ?—அடி!
தங்க மயில் நீதானோ?
தனிமையிலும் இதுதானோ?

மலைமுகட்டினில் குறிஞ்சி நாட்டினில்
வடித்துவந்த செந்தேனே!—உன்
வாயிதழ் காட்டடி மானே!
வண்டுபோல் மொய்த்திடு வேனே!

முகத்தை மறைத்து முதுகைக் காட்டி
மூடி இருப்பதும் ஏனோ?—வாயை
மூடி இருப்பதும் ஏனோ?
முல்லைக் கொடி நீதானோ?

அகம் படித்துப் பின் புறம் படிக்கலாம்;
அச்சம் தவிரடி மானே!—எனக்(கு)
ஆசைக்கொரு முத்தம் தானே!
அகங்கைத் தேனடி நானே!

# 52

## மாலையும் வந்தது!

செங்கதிர் சென்றது;
செவ்வல்லி பூத்தது;
திங்களும் வந்தது பாரடி!—உன்
செவ்விதழைச் சற்று நீட்டடி!

மாடுகள் சென்றன;
மாலையும் வந்தது;
கூடுகள் ஓய்ந்தன பாரடி!—உன்
குளிர் இதழைச் சற்று நீட்டடி!

செக்கர் மறைந்தது;
தென்றலும் வந்தது;
அக்கரை நீளோடை கேளடி!—உன்
அதரத்தை ஆட்டாதே நீட்டடி!

கொல்லை இருண்டது;
குளிர்மை நிறைந்தது;
முல்லையும் பூத்தது பாரடி!—உன்
முத்துப் பல் வாயிதழ் நீட்டடி!

# 53

## இன்பந் தந்தானே!

பொட்டிட்டு மையெழுதிப்
பூ முடித்துக் கொண்டிருந்தேன்; வந்தான்!
தொட்டிழுத்துத் தோளணைத்துச்
சுடச்சுட முத்தமொன்று தந்தான்!

பட்டப் பகல் வெய்யிலிலும்
தொட்ட இடம் கட்டிவெல்லம் தானே!
விட்டுக் கலங்க வைத்தே
எட்டிப் பிரிந்து சென்றானே!

இன்று நாளை என்று எண்ணி
எட்டி எட்டிப் பார்த்தழுதேன் நானே!
சென்றவன் திரும்பி வந்தான்;
செந்தமிழ் போல் இன்பந்தந் தானே!

## 54

# மனமும் மாருதோ?

மயிலைப் பாராதோ?—தோழி!
மனமும் மாருதோ?
மயிலைப் பார்த்தென் சாயல் எண்ணி
வந்து சேராதோ?—உடன்
வந்து சேராதோ?

குயிலைக் கேளாதோ?—தோழி!
கொள்கை மாருதோ?
குயிலைக் கேட்டென் குரலை எண்ணிக்
குதித்து வாராதோ?—என்னை
மதித்து வாராதோ?

மானைப் பாராதோ?—தோழி!
மனது மாருதோ?
மானைப் பார்த்தென் மருட்சி கண்டு
வந்து சேராதோ?—உடன்
வந்து சேராதோ?

தேனை உண்ணுதோ?—தோழி!
சிந்தை மாருதோ?
தேனை உண்டென் இதழை எண்ணித்
திரும்பி வாராதோ?—உடன்
திரும்பி வாராதோ?

# 55

## விடையனுப்பி வைத்தாள்!

கண்ணால் எழுதிவிட்ட
காதல் கடிதத்திற்குப்
பெண்ணாள் விடையனுப்பி வைத்தாள்!--கடைக்
கண்ணால் விடையனுப்பி வைத்தாள்!
நான் கண்ணால் எழுதிவிட்ட

அண்ணாந்த மார்பகமும்
அசைந்த பிடிநடையும்
கண்ணால் மறந்திருக்கப் போமோ?—அவள்
கட்டழகிற் கீடுசிலை யாமோ?

நெல்லுக்கு மாமழையாம்!
நிலவுக்குச் செங்கதிராம்!
வில்லுக்கு நாண் அவள்; நான் அம்பே!—இந்த
விரிஉலக வாழ்க்கையவள் தெம்பே!

கல்லுக்கும் செம்பிற்கும்
கற்பனைக் கலைஞனுக்கும்
நல்லவழி காட்டும் இளமானே!—என்றும்
நான்மறவா உச்சிமலைத் தேனே!

## 56

# நடக்கிறதே அண்ணே !

குங்குமத்தால் பொட்டெழுதிக்
கொண்டைஇட்டுப் பூமுடித்துச்
செங்கரும்பு நடக்கிறதே—அண்ணே ! வானத்
திங்கள் கண்டு மறைகிறதே அண்ணே !

கண்வீசி உயிர்பறித்தே
கைவீசி நடைநடந்தே
வெண்ணிலவு நடக்கிறதே—அண்ணே ! மான்
வெருண்டோடி மறைகிறதே அண்ணே !

விற்புருவம் மேலேற
மெல்லிதழில் சிரிப்பேறப்
பொற்சிலை நடக்கிறதே—அண்ணே ! யானை
போயோடி மறைகிறதே அண்ணே !

இடைகுலுங்க நடைகுலுங்க
இருதோளும் முன்குலுங்க
நடந்துவரும் மின்னல் கண்டு—அண்ணே ! குயில்
நாணிவாயை அடைத்ததுவே அண்ணே !

# 57

## பார்த்தாயா மகனே ?

பார்த்தாயா மகனே ? இதுவுன் அப்பன்
பட்டபின் நாட்டிற்காக உயிர் விட்டபின்
நட்டகல் ! நட்டகல் !

கூர்வேல் ஏந்து கொல்புலிப் போத்தே!
சூழ்ந்த பெரும்பகை வடக்கினில் வீழ்த்தே !

காந்தளூர்ச்சாலை உன்அப்பன் கல மறுத்தான்;
கடாரத்தை வென்ருன்; கைக்கொண்டான் உன்
[மாமன்!
மாய்ந்தாலும் நாட்டிற்கே மாய்ந்தவர் உன்
[முன்னோர் !
மகனே ! விரைந்தெழுநீ ! பகை வீழ்த்திமீளடா !

கல்தோன்றி மண்தோன்ருக் கால முதலிருந்து
வில்லேந்திப் போர்செய்த வீர மரபினன்நீ !
எல்லையில் வந்தின்றே தொல்லை தருஞ்சீனனின்
இடுப்பை முறிப்பாய்; உயிர் குடிப்பாயடா மகனே!

# 58

## புலியே, எழு !

செத்த குழந்தையை
வெட்டிப் புதைத்திட்ட
செந்தமிழ் நாடுன்றன் நாடு !—தம்பி!
வந்த பகை எதிர்த்தோடு !

எத்தனை முடிமன்னர்
எதிர்த்தனர், மாய்ந்தனர்
என்பதை நீயறியாயோ ?—இன்று
முன்வரு பகை நொறுக்காயோ ?

நீர்தரு செல்வங்கள்
நிலந்தரு செல்வங்கள்
ஊரில் நிறைந்ததே தம்பி !—பகைப்
போரை முறி வெற்றி நம்பி !

காருக்குப் பஞ்சமா ?
கழனிக்குப் பஞ்சமா ?
போருக்(கு) ஏன் அஞ்சவேண்டும் ?—தமிழ்ப்
புலியே, எழு ! வெற்றி யாண்டும் !

# 59

## அன்னையே, வணக்கம்!

அன்னையே வணக்கம்! வணக்கம்!
என்னை ஈன்ற அன்னையே வணக்கம்! வணக்கம்!

இந்நாள் நீஇலை என்றாலும் தாயே
உன்னை என்னால் மறக்கவா முடியும்?

இளைய வயதில் இறந்தாய்; பிரிந்தாய்;
எனினும் என்றன் உளத்தினில் நிறைந்தாய்!
குளத்துத் தாமரை குளிர்முகத் தாயே!
கோடி கோடி வணக்கம் ஏற்பாயே!

வாயைக் கட்டி மருந்தை அளித்தாய்;
பாயில்கண் மூடாது இரவைக் கழித்தாய்;
காயும் நிலவைக் காட்டிச் சிரித்தாய்;
தாயே மறப்பேனோ அணைத்துக் களித்தாய்!

ஒன்பது வயதில்தாய் அன்பை இழந்தேன்;
ஒவ்வொரு நாளுமதை எண்ணி அழிந்தேன்;
என்புதோல் பாட்டியின் அணைப்பில் வளர்ந்
[தேன்;
என்றாலும் அன்னையே உன்னையா மறந்தேன்!

# 60

## எங்கள் தமிழ்நாடு

எம்நாடு! பொன்னாடு! எமையீன்ற திருநாடு!
எங்கள் தமிழ் நாடு!—வாழ்க
மங்காப் புகழோடு!

அம்மையும் அப்பனும்
அவர்வழிப் பாட்டனும்
ஆடித் திரிந்ததுவாம்!—இன்பம்
தேடிப் பிரிந்ததுவாம்!—வாழ்க!

தந்தம் அகில் தேக்குச்
சந்தனக் கட்டைகள்
எங்கும் நிறைந்ததுவாம்!—மலைவளம்
பொங்கச் சிறந்ததுவாம்!—வாழ்க!

விந்தம் குமரிமுனை
விரிந்த கடல்முப் பால்
மேவப் பரந்ததுவாம்!—ஆறுகள்
தாவிக் கலந்ததுவாம்!—வாழ்க!

கத்து கடல் வளங்கள்
முத்துப் பவழங்கள்
பெற்றுச் சிறந்ததுவாம்!—உலகிற்கு
விற்றுக் களித்ததுவாம்!—வாழ்க!

★

# 61

## எழுந்திரு !

எழுந்திரு! எழுந்திரு! எழுந்திரு!
இருள் கிழிக்கும் அறிஞர் அண்ணு
இளம் பரிதி பாசறைக்கே

இமயம் கண்டு வெற்றிகொண்ட
இனத்தின் ஏறே! சினப்புலியே!

நமையடக்க வரும்வடக்குத்
துடுக்கடக்கத் தோள்குலுக்கி
எழுந்திரு! எழுந்திரு!—பகை
தூள்! தூள்! தூள்! தூளாகும்!

தொன்னூலைத் தந்ததமிழ்
அந்நாள் இகழ்ந்தமன்னர்
என்ஞர்? நீ வடக்கைக்
கேள்! கேள்! கேள்!—தமிழ்
ஒன்ஞர் உயிர் குடிக்கும்
வாள்! வாள்! வாள்!

போர்முறையைக் கண்டவர்கள்
பொங்குகடல் வென்றவர்கள்
யார்க்கடிமை? என்றடிமை?
கேள்! கேள்! கேள்! — வடக்கை
வெற்றி கண்டதே தமிழர்
தோள்! தோள்! தோள்!

## 62

# நட! நட!

நட...! நட...! விரைந்து நட...! நட...!
நமது நாட்டை நாமடைவோம்!
நாமெவர்க்கும் அடிமையல்லோம்!—

முத்தம்ஈயும் கடல்களுண்டு;
முப்புறத்தும் மலைகளுண்டு;
வற்றிடாத ஆறுநன்செய்
வயல்கள்உண்டு; செயல்கள்உண்டு!

இரும்பும்உண்டு; கரும்பும்உண்டு;
எள்ளும்உண்டு; கொள்ளும்உண்டு;
அரும்பொன் உண்டு; கரியுமுண்டு;
அணு உலைக்கே மணலுமுண்டு!

வெண்ணெய்உண்டு; எண்ணெய்உண்டு;
விலையுயர்ந்த மணிகள்உண்டு;
அண்ணாஉண்டு; தமிழுமுண்டு;—
ஆண்டஇனத் தோளுமுண்டு!

# 63

## வா! வா! வரிப்புலியே!

ஏற்றமும் தாழ்வும்
எப்படி, எதனால்
என்றுநீ நினைத்ததுண்டா?
மாற்றம் காண்போம்;
வாழ்ந்தவர் வாழ்வோம்!
வா! வா! வரிப்புலியே!

ஆலைகள் அங்கே;
சாலைகள் அங்கே;
அத்தனையும் அங்கே;
வேலைகள் அங்கே;
விளைவுகள் அங்கே;
வெறுங்கை பசிஇங்கே!

கல்லணை அங்கே;
மெல்லணை அங்கே;
கைத்தொழில் வளமங்கே;
புல்லணை அங்கே;
பொருளெலாம் அங்கே!
பொட்டல் வெளிஇங்கே!

வரிப்பொருள் அங்கே;
மலைப்பொருள் அங்கே;
மாக்கடல் பொருள் அங்கே;
எரிவயி றிங்கே;
ஏப்பம் அங்தே;
இல்லாக் கொடுமை இங்கே!

ஆள்பவர் அங்கே;
அரியணை அங்கே;
அதட்டல் மிரட்டல் அங்கே;
மாள்பவர் இங்கே;
வாழ்பவர் அங்கே;
வாழவக்கில்லை இங்கே!

# 64

## பழக்கூடைக்காரி

கூடை தூக்கிக் குலுக்கி நடக்கும்
குமரி அழகுக் குமரி—தமிழ்க்
குமரி அழகுக் குமரி!—அவள்
குறுநகைக்கே ஈடுசெய்யப்போமோ
பூத்த அலரி! செவ்வலரி!

வாடை அல்ல தென்றற் காற்று
வாழ்வின் இன்ப ஊற்று!—மனத்
துயரைப் போக்கும் மாற்று!—அவள்
வண்டுவிழி ஆணினத்தின் உயிரைக்
கொல்லும் கூற்று! கொடுங்கூற்று!

மறைத்து வைத்த கொய்யாக் கனி
வாடை காட்ட மயக்கும்;—உடன்
வாங்க ஆசை நிறைக்கும்!—எங்கோ
வந்த செயல் மறந்து பித்தம் ஏறக்
கண்கள் மறைக்கும்! எண்ணம் குறைக்கும்!

அறைத்த சாந்து கன்னம் குழிய
அல்லிஇதழ் சிரிக்கும்;—முகத்
தாமரை மலர் விரிக்கும்!—அவள்
அழகுநெற்றி விற்புருவம்
அம்பிரண்டைத் தெறிக்கும்! உளம்வெறிக்கும்!

**அவன் :**

கொய்யாக் கனிவேண்டும்; கூட
விலையும் கூறவேண்டும்;—சரி
விலையும் கூறவேண்டும்;—இந்தா
கையில் காசு! கோவைச் செங்காய்க்
கனியிருந்தால் வேண்டும்! உடன்வேண்டும்!

**அவள் :**

ஐயா! அன்னை அண்ணன் தங்கை
அறிந்து கொண்ட பின்னர்,—விலை
தெரிந்துகொண்ட பின்னர்—பொருள்
அடக்க விலை எடுத்துரைப்பேன்
அந்திசாயும் முன்னர்! யாவும் பின்னர்!

# 65

## பாரடி !

ஈயம் பூசுகின்றான் பாரடி! மரநிழலில்
ஈயம் பூசுகின்றான் பாரடி!

'இட் இட்'டென்று தட்டிக்கொண்டே
என்னுளம் அவன்பால் இட்டுக்கொண்டே

கைக்கும் தன்மையைப் போக்கக்
கைக்காத் தன்மையை ஆக்கப்
பொய்க்கால் குதிரை போலக்
கைகால் தலையை ஆட்டி

மங்கிய செப்புச் சட்டி
வடிதட்டு தவலை அண்டா
வெங்காரப் பொடி தூவிச்
சிங்கார மாக்குகின்றான்!

ஒட்டை உடைசல் தட்டி
உள்ளுள்ள மாசு போக்கி
நாட்டைத் திருந்தச் சொல்லி
வீட்டைத் திருத்துகின்றான்!

# 66

## கலியாணமாகாத தம்பி!

கலியாண மாகாத தம்பி!—இந்தா, இதைக்
காதோடே வைத்துக்கொள் என்சொல்லை நம்பி!

புலிதங்கிப் போன குகையொத்த தாயின்
புத்தெழில் வீச்சே! போர்ப்புலிப் போத்தே!

படிக்காத பெண்களோ கம்பளிப் பூச்சி!
பண்பிலா திருப்பவள் செந்தேள்! சீச்சி!
அடிக்கடி அழுபவள் அயலவர் சூழ்ச்சி!
அடங்காப் பிடாரியால் மனையறம் வீழ்ச்சி!

பணக்காரப் பெண்களோ பகட்டான பொம்மை!
பட்டியோ ஊர்ச்சண்டைக் கிழுப்பாளே நம்மை!
வணக்கமாய் இருப்பவள் வாழ்க்கைக்கு நன்மை!
மனத்தில்வை மாப்பிள்ளாய்! நான்கண்ட உண்மை!

அன்பான பண்பினள் அகப்புறப் பாட்டாம்!
அறிவோ டிருப்பவள் முக்கனிக் கூட்டாம்!
எந்நிலை சிறந்தது எனஎண்ணிப் பார்த்தே
இன்றுனே அடைவாய்! மனைக்கு நல்வாழ்த்தே!

# 67

## பாங்கைப் பாரடி!

மச்சான் வரும் பாங்கைப் பாரடி!—கிழ
மச்சான் வரும் பாங்கைப் பாரடி!

மொச்சை போல விழிஇரண்டும்,
முறுக்கு மீசைச் சுழிஇரண்டும்,
பச்சை குத்திய தோளிரண்டும்,
பார்க்கப் பார்க்க ஆசை தூண்டும்!

'ஐஜ' என்றே அதட்டிக்கொண்டே
அடர்ந்த மயிர்க்கை நீட்டிக்கொண்டே
பெய்யும் மழையில் நனைந்துகொண்டே
பின்புறம் வண்டி தள்ளிக்கொண்டே

மடியில் ஈச்சன் குருத்துப் பெட்டி;
வயிற்றே வண்ணார் சாலு சட்டி;
ஒடிந்த சாட்டைக் கழியை நீட்டி
ஓசை காட்டி மாட்டை ஓட்டி

# 68

## தடிப்புக் குறையவில்லை!

*தலைநரைத்த கிழவனுக் கின்னும்*
*தடிப்புக் குறைய வில்லை!*
*தலைகுலுக்கிக் கன்னம் இடித்துக்*
*கொடுத்தால் தெரியும் தொல்லை!*

*மலையைப் பார்த்தென் தோளைப் பார்த்து*
*வாய்க்குள்ளே சிரிக்கின்றான்;*
*கயலைப் பார்த்தென் கண்ணைப் பார்த்துக்*
*கடைக்கண்ணால் பார்க்கின்றான்!*

*கிட்ட வந்து 'குட்டி' என்றே*
*தொட்டுப் பார்க்கிறான் கிழவன்;*
*'எட்டி நட'வென்றே எரிந்து விழுந்தால்*
*இளிக்கிறான் கிழஉழவன்!*

*குழிந்த கண்ணை முதுகுக் கூனைக்*
*குத்திக் காட்டினால் போதும்!*
*ஒழிந்த வேளையில் யாருடனும் வந்து*
*தொல்லை செய்யான் ஒருநாளும்!*

# 69

## என்று திரும்புவார்?

எல்லையைத் தாண்டியே
எழுத்தோதப் போனவர்
என்று திரும்புவார்? தோழி!—இல்லம்
என்று திரும்புவார்? தோழி!

நல்லவர், பைந்தமிழ்
வல்லவர் இடைப்பட்டால்.
நாட்டம் திரும்புமோ வீட்டின்மேல்?—கண்
ஓட்டம் திரும்புமோ நாட்டின்மேல்?

பிழிந்த அடைத்தேனும்
செழுந்தமிழ் இலக்கியம்
பேழை திறந்தபின் மீள்வரோ?—இளம்
பெண்டின் நினைப்பினால் ஆள்வரோ?

கள்ளர்க் கரியதாம்
அள்ளக் குறையாதாம்
கல்வித் கடற்கரை சென்றவர்—மனைச்
செல்வி மறப்பரே என்றனர்.

# 70

## இதுவே வேலை!

இதுவே வேலை—என் மகளுக்கோ
இதுவே வேலை!

புதுப்புது வளையல்கள்
போடென்று சொல்வாள்;
போட்டபின் கைவளை கழன்றோடிற் றென்பாள்;

மதுமலர் தாரணி மன்னவர் காலை
வளநகர் வலம்வரல் அவரது வேலை;
கதவிடை மன்னர்கை நெய்யணி வேலைக்
காண்பதே என்மகள் அன்றாட வேலை!

தொகை வகையாகவே வளையலைத் தோள்மேல்
தூக்கித் திரிதலே விற்பவன் வேலை!
பகைவர்க்கோ மகள்மீது பழிதூற்றல் வேலை!
பாலூட்டினுள் எனக்கோ வளைதரல் வேலை!

# 71

## அண்ணா வாழ்க!

அண்ணா! எங்கள் அண்ணா! அறிஞர்
அண்ணா! எங்கள் அண்ணா வாழ்க!

கண்ணைக் கவரும் கடல்மா முத்து!
கன்னித் தமிழ்தரு இலக்கியச் சொத்து!

திராவிடர் உள்ளத் தழியா ஓவியம்!
இராப்பகல் எண்ண இனிக்கும் காவியம்!

கேட்டார்ப் பிணிக்கும் தீந்தமிழ் உரைப்போன்;
கேள்வி இலார்மன இருளைக் கரைப்போன்;
நாட்டார்க் கரசியல் அறிவை நிறைப்போன்;
நமைநாம் ஆள வருபகை முறைப்போன்!

வாழ்ந்தவர் வாழ வகைவழி காட்டி;
மறத்தமிழ் விடுதலை வீரர்கை ஈட்டி;
சூழ்ந்த வடவர் பகையை ஓட்டித்
தோன்றிய ஞாயிறு ஒளிக்கதிர் நீட்டி!

# 72

## வாழ்க வாழ்கவே!

வாழ்க வாழ்கவே! அறிஞர்
அண்ணு வாழ்கவே!

சூழ்ந்த தாயக இருளைப் போக்கத்
தோன்றிய காலைக் கதிரவன் அண்ணு!

எழுத்தில் பேச்சில் புதுமையைக் கண்டோன்;
இளைஞர் முதியோர் உளமிடம் கொண்டோன்;
பழுத்த அரசியல் அறிஞரும் வியக்கும்
பண்பும் அறிவும் படைத்தோன் அண்ணு!

மாற்ருர் மருளும் வாக்கினன் அண்ணு!
வஞ்சகர்க் கஞ்சாப் போகினன் அண்ணு!
கூற்றும் வெருளும் திராவிட இளைஞர்
கோட்டைப் பெரும்படைத் தலைவன் அண்ணு!

பாய்புலி பகைக்கு! பழகப் பசுவாம்!
பழந்தமிழ் இலக்கிய இனிமைச் செறிவாம்!
தாய்த்திரு நாடாம் திராவிட நாட்டின்
தலைவன்; விடுதலைத் தலைவன் அண்ணு!

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras-1.